**செய்தி வெளியீடு எண் : 2288** **நாள் : 16.11.2023**

**செய்தி வெளியீடு**

தென்காசி மாவட்டத்திலுள்ள இராமநதி நீர்த்தேக்கத்தின் கீழ் பாசனம் பெறும் வடகால், தென்கால், பாப்பான்கால் மற்றும் புதுக்கால் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசனம் பெறும் நிலங்களுக்கு பிசான சாகுபடிக்கு இராமநதி நீர்த்தேக்கத்திலிருந்து 17.11.2023 முதல் 31.03.2024 வரை 136 நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 60 கன அடி அளவுக்கு மிகாமல், பாசனபருவகாலத்தின் மொத்த தேவையான தண்ணீர் அளவான 823.91 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் தென்காசி மாவட்டத்தில் 4943.51 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமை செயலாளர்**

**நீர்வளத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in